www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

HSS

12 - ஆம் வகுப்பு

காலம் : 3.00 மணி

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பொதுதமிழ்

மதிப்பெண்கள் : 90

### பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 14X1 = 14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. யார்? எது? ஆகிய வினாச் சொற்கள் பயனிலையாய் அமைந்து, உணர்த்தும் திணைகள் முறையே....... . அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை அஃறிணை இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை
3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது
அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள் இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்
4. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை ...... .
அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும் இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் கங்கமும்
5. "சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்தால் உயரலாம்" - தொடரில் உள்ள வேற்றுமை உருபுகள் முறையே
அ) ஐ, கு ஆ) ஆல், இன் இ) கு, ஆல் ஈ) இன், ஐ
6. ........... என்பது காப்பியப் பண்பே" அ) படம் ஆ) காதை இ) பாவிகம் ஈ) சருக்கம்
7. சுரதா நடத்திய கவிதை இதழ் அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
8. பிழை நீக்கி எழுதப்பட்ட தொடரைக் கண்டறிக.
அ) ரங்கன் வெங்கலப் பாத்திரக் கடை வைத்திருக்கிறார். ஆ) ஐப்பசி அடைமலையில் ஊருணி நிறைந்தது
இ) எங்கள் ஊரில் நூலகக் கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கியது ஈ) நம் மானிலம் இந்த ஆண்டு வரட்சியால் பாதிக்கப்பட்டது.
9. **பொருந்தி விடை தேர்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) திருவல்லிக்கேணி ஆறு | - | (i) மாவலிபுரச் செலவு | அ) (1) - (iv), (2) - (i), (3) - (ii), (4) - (iii) |
| ஆ) பக்கிங்காம் கால்வாய் | - | (ii) கல் கோடரி | ஆ) (1) - (ii), (i) - (iii), (3) - (i), (4) - (iv) |
| இ) பல்லாவரம் | - | (iii) அருங்காட்சியகம் | இ) (1) - (ii), (2) - (iv), (3) - (iii), (4) - (i) |
| ஈ) எழும்பூர் | - | (iv) கூவம் | ஈ) (1) - (i), (2) - (iii), (3) - (iv). (4) - (ii) |

10. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில்
சூழ்கழ மன்னற்குக் காட்டல் வேண்டி - பாடல் அடிகளில் வெளிப்படும் செய்திகள் 1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள். 2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.
அ) 1 சரி, 2 தவறு ஆ) 1 தவறு, 2 சரி இ) 1 தவறு, 2 தவறு ஈ) 1 சரி, 2 சரி
11. 'காய்நெல்' - இலக்கணக் குறிப்பு யாது?
அ) பண்புத்தொகை ஆ) வினைத் தொகை இ) வேற்றுமைத் தொகை ஈ) அன்மொழித் தொகை
12. 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' -என்று போற்றப்படுபவர் ........ . அ) மு.வரதராசனார்
ஆ) திரு.வி.க. இ) தேவநேயப் பாவாணர் ஈ) மயிலை சீனி - வேங்கடசாமி
13. பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது ....... .
அ) தொன்மம் ஆ) படிமம் இ) குறியீடு ஈ) உருவகம்
14. கடலின் பெரியது எது? அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி இ) திணையளவு செய்த உதவி ஈ) செய்யாமல் செய்த உதவி

### பகுதி - II - பிரிவு -1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3 X 2 = 6

15. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?
16. கலிவிழா, ஒலிவிழா - விளக்கம் தருக.
17. ஒருமுக எழினி, பொருமுக எழினி - குறிப்பு எழுதுக.
18. இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2 X 2 = 4

19. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
20. சென்னையில் உள்ள தமிழாய்வு நூலகங்களைக் குறிப்பிடுக.
21. சங்க காலத்தில் தாய்வழிச் சமூக முறையில் பெண்கள் பெற்றிருந்த உரிமைகள் யாவை?

**பிரிவு - 3 எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7 X 2 = 14

22. **உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுது.**
அ) அச்சாணி இல்லாத தேர்போல ஆ) தாமரை இலை நீர் போல
23. ***மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுது.*** அ) விலை, விளை, விழை ஆ) தலை, தளை, தழை
24. **புணர்ச்சி விதி எழுதுக.** அ) அருங்கானம் **(அல்லது)** ஆ) உள்ளொன்று
25. ***பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.*** அ) புள்ளைக்கு உடம்பு சரியில்லை மூணு நாளா சிரமப்படுது.
ஆ) ரவைக்கு சித்தப்பன காவலுக்குப் போவ சொல்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

26. ***ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.*** அ) வியந்து ஆ) கண்டான்
27. **சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.** அ) பலகை ஆ) தாமரை
28. ***வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.*** ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம் உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்றுக் கொடுக்கும்.
29. **தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**
அ) முருகன் சோறு சாப்பிட்டுப் பால் குடித்தான் ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.
30. ***கலைச் சொல்லாக்கம் தருக.*** அ) Mini meals ஆ) Debit card

*குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.* ***வழிவழியாக***

**பகுதி – III பிரிவு – 1**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

31. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?
32. ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.
33. மாதவியின் நாட்டிய அரங்கேற்றத்தின் போது இசைக் கருவிகள் ஒலித்த முறை குறித்து எழுதுக.
34. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக்காட்டு.

**பிரிவு – 2 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** 2 X 4 = 8

35. தாயும் தந்தையும் பணிக்குச்செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
36. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.
37. வேளாண் மேலாண்மை குறித்து வெ.இறையன்பு எடுத்துரைக்கும் கருத்துகள் யாவை?
38. மயிலை சீனி. வேங்கடசாமியின் இலக்கிய ஆய்வுகள் குறித்து எழுதுக.

**பிரிவு – 3 எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடை தருக.** 3 X 4 = 12

39. நிரல்நிறை அணியை விளக்குக. **(அல்லது)** எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியர் ஆகப்பெறின். – இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.
40. **இலக்கிய நயம் பாராட்டுக. மையக் கருத்துடன் மூன்று நயங்களை எழுதுக.**

*`துன்பு உளது எனின் அன்றோ*
*சுகம் உளது? அது அன்றிப்*
*பின்பு உளது இடை மன்னும்*
*பிரிவு உளது என உன்னேல்;*
*முன்பு உளெம் ஒரு நால்வேம்*
*முடிவு உளது என உன்னா*
*அன்பு உள இனி நாம் ஓர்*
*ஐவர்கள் உளர் ஆனோம் –* ***கம்பர்***

41. ***பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.***
அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. ***(அல்லது)*** எறும்பு ஊரக் கல்லும் தேயும்
42. `பாடாண்' திணையை சான்றுடன் விளக்குக. ***(அல்லது)*** `வையகம் பனிப்ப வலனேர்பு வளை இப்' – எனத் தொடங்கும் நெடுநல் வாடையின் துறையை விளக்குக.
43. **தமிழாக்கம் தருக.** 1) Wangari Mathai founded the green belt movement. 2) Social forestry schemes. 3) A new language is a new life. 4) Knowledge of languages is the doorway to wisdom.

**செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.**

தமிழின் சிறப்புகளைப் பற்றி ஆய்வுகள் பல செய்தமையால் `தமிழ் இமயம்' என்று தமிழ் அறிஞர்களால் போற்றப்பட்டவர் வ.சுப.மாணிக்கம். `எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற கொள்கையைப் பறைசாற்றுவதற்காகத் `தமிழ்வழிக் கல்வி இயக்கம்' என்ற அமைப்பை நிறுவித் தமிழ்சுற்றுலா மேற்கொண்டவர் அழகப்பா கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும், முதல்வராகவும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பணியாற்றினார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சிறப்புடன் செயலாற்றிய போது பல்கலைக்கழக நடைமுறைகள் தமிழில் இருக்க வேண்டும் என ஆணை பிறப்பித்ததுடன் அங்குத் தமிழாய்வு நடைபெறவும் வழிவகுத்தார். `தமிழ் யாப்பியல் வரலாறும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் ஆய்வு மேற்கொண்டார். வினாக்கள் : 1) `தமிழ் இமயம்' – என்று போற்றப்பட்டவர் யார்?
2) வ.சுப. மாணிக்கம் ......... இயக்கத்தை நிறுவினார். 3) வ.சுப. மாணிக்கம் .......... பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகப் பணியாற்றினார். 4) வ.சுப. மாணிக்கம் மேற்கொண்ட ஆய்வின் தலைப்பு யாது?

**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.** 3 X 6 = 18

44. சினத்தைக் காத்தல் வாழ்வை மேன்மைப்படுத்தும் இக்கூற்றை முப்பால் வழி விரித்துரைக்க. ***(அல்லது)*** கவிதை எழுத அறிய வேண்டுவனவாகச் சுரதா கூறுவனவற்றை விவரிக்க.
45. குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக. ***(அல்லது)*** சென்னை மாநகரம் அறிவின் நகரமாக விளங்குவதையும் அதன் பண்பாட்டு அடையாளங்களையும் நூம் பாடப்பகுதி வழி விளக்குக.
46. மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுது. ***(அல்லது)*** "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" என்ற கூற்றை தலைக்குளம் சிறுகதை வாயிலாக எடுத்துரைக்க.

**பகுதி – V** 4 + 2 = 6

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** அ) "காய்நெல் அறுத்துக்...." எனத் தொடங்கும் புறநானூற்றுப் பாடல். ஆ) `புகின்' – என முடியும் திருக்குறள்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com